දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011 - 2876169
011 - 2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

# රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
# அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
# OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

**<u>கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள மருத்துவர் திரு. எஸ்.எஸ்.எம். ஷாபி அவர்களை மீண்டும் சேவைக்கு அழைத்தல் தொடர்பில்.</u>**

நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள மருத்துவர் திரு.எஸ்.எஸ்.எம். ஷாபி, அவர் தன்னை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவுக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் ஊடாக செய்த வேண்டுகோள் தொடர்பில் இது வரையில் இறுதித் தீர்மானமொன்று வழங்கப்படவில்லை.

அந்த மருத்துவ உத்தியோகத்தருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்றை நடாத்தி அதன் அறிக்கையை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அறிக்கை இது வரையில் கிடைக்கப்பெறவில்லை. அந்த அறிக்கை மற்றும் மருத்துவர் திரு.எஸ்.எஸ்.எம். ஷாபி அவர்களின் வேண்டுகோள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் தனது பரிந்துரையை சமர்ப்பிக்கும் வரையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவினால் இது தொடர்பில் இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படமாட்டாது என்பதை குறிப்பிடுகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் இதற்கு மாற்றமாக பல்வேறுபட்ட ஊடக வலையமைப்புக்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள சகலவிதமான அறிக்கைகளும் பொய்யானவை என்றும் அத்தகைய அறிக்கைகள் அனைத்தும் வன்மையாக நிராகரிக்கப்படவேண்டியவை என்பதையும் அறியத்தருகின்றேன். அத்தோடு, இது தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களோ அல்லது ஜனாதிபதி அலுவலகத்தின் வேறு எந்தவொரு அதிகாரியோ இந்த ஆணைக்குழுவிடமிருந்தோ அல்லது அதன் கீழுள்ள சுகாதார சேவைக்குழுவிடமிருந்தோ எத்தகைய வினவலையும் செய்யவில்லை என்பதையும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

2020.01.13